
போரில்லா நல்லுலகம்
அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

# அணிந்துரை

எழுத்தாளர் அருள்நிதி. பானுகுமார் ஐயா அவர்கள் எழுதிய போரில்லா நல்லுலகம் பற்றிய அவர்களது சிந்தனை வியக்கத்தக்கதாக, பிரமிப்பாக இருந்தது.

உலகப் போர் மற்றும் உலக அமைதியை சிந்திக்கும் போது எழுந்த விளைவு தான் இந்த புத்தகம் என்று ஐயா அவர்கள் சொன்னார்கள்.

மேலும் இந்த புத்தகத்தில் சர்வாதிகாரியான ஹிட்லர் பற்றிய பிறப்பு முதல் இறப்பு வரை, முதலாம், இரண்டாம் உலகப் போரினால் ஹிட்லரின் கொடுங்கோல் ஆட்சியினால் ஏற்பட்ட போரின் சீரழிவுகளும், உயிரிழப்புகளும் பற்றி அவர் எடுத்துரைத்த விதம் மனதை ஏனோப் பிழிந்தது.

போரில் எத்தனை அவலங்கள் . ஏன் இந்த மண்ணாசை , பேராசை, ஆணவம் ? இந்த ஹிட்லர் மனிதருக்கு ? எனக் கேட்கத் தோன்றும் அளவு பானுகுமார் ஐயா அவர்கள் சித்தரித்த விதம் மிக மிக ஆழமாக அமைதியை கொண்டுவர வேண்டும் என்கிற ஒரு வேட்கை அனைவருக்குள்ளும் எழும்.

அதற்கான தீர்வுதான் வேதாத்திரியம் அமைத்துக் கொடுத்த 14 அம்சத் திட்டத்தில் போரில்லா நல்லுலகம் ஆகும்.

நடந்தவைகள் அத்தனையுமே எத்தனையோ பேரின் பேராசை, ஆணவம், உலகத்தை அடக்கி ஆள மனஎழுச்சிகள், பேராசையின் காரணமாக இந்த பிரபஞ்சத்தில் உருவாக்கப்பட்ட எண்ணப் பிரதிபலிப்பின் மோதல்கள், இதன் மொத்த உருவம் தான் அடோல்ஃப் ஹிட்லர் எனும் சர்வாதிகாரியின் கதை.

ஜெர்மனியின் ஆட்சியில் அவரது இறப்பு வரை விவரித்த விதம், தனது ஆட்சியின் கீழ், போரில் கொன்று குவித்த கோடான கோடி மக்களின் குருதி வாடை வரை கூறும் போது அருட்தந்தை வேதாத்திரி மகரிஷியின் அமைதியும், அன்பும் கருணையும், அவர் எழுதிய உலக

சமாதானம் திட்டங்களும் அவர் தன்னையே ஆராய்ச்சியில் ஈடுபடுத்தி கொடுத்த மனவளக்கலை பயிற்சிகள், மற்றும் மனித சமுதாயத்தை வருமுன் காக்க வைக்க அவர்களது சீரிய முயற்சிகள்.

மேலும் அமைதியை நிலை நாட்ட வைக்கும் உடல் உயிர் மனப் பயிற்சிகளை உணர்த்த வைக்கிறது.

ஐயா அவர்கள் தாயுமானவரின் பாடல், வேதாத்திரி மகரிஷி அவர்களின் ஞானக்களஞ்சியம் பாடல்கள் பொருத்தமான இடத்தில் தேர்ந்தெடுத்து இந்த நூலில் கோர்த்த விதம் அதி அற்புதம்.

மனித ஆற்றல் அழிவுக்கு இல்லாமல் ஆக்கத்துக்கு பயன்படுவதற்கு ஐந்தொழுக்கப் பண்பாடு இரண்டொழுக்க பண்பாடு ஆக அளித்து, நம்மை சீர்திருத்தும் அறிஞர்கள் முன் வர வேண்டும் எனும் மகரிஷியின் முயற்சிகளை அழகாகக் கூறியுள்ளார்களா.

புத்தி நுட்பம், கூட்டுறவால் ஒன்று சேர்த்து அறிவோடு சுகாதாரம், பொருளாதாரம் , ஆட்சிமுறையை உயர்த்தி எல்லாம் அன்பு நெறியாக, இன்பம் அமைதியோடு, நில உலகில் வாழ ஒத்துழைப்போம் என்று சங்கல்பம் எடுப்போம்.

மனிதனின் தனி அமைதி மட்டுமே உலக அமைதிக்கு வித்திடும் ஏன் அருட்தந்தை அவர்கள் கூறலானார்கள் என்று பானுகுமார் ஐயா அவர்கள் எழுதிய நூலில் விளங்குகிறது.

ஓர் உலக கூட்டாட்சிக்கு அனைவரும் ஒத்துழைப்போம். உலக அமைதி வந்தேத் தீரும். அதை விரைவில் காணப்போகிறோம் . அமைதி நிலையை, மனநிறைவை நாம் அகக்காட்சியாக காண்போம்.

இவையெல்லாம் சாத்தியம் என்று அறுதியிட்டு கூறும் விதமாக மூன்றாம் உலகப்போர் வரவே வராது என்று ஆணித்தரமாக எடுத்துரைத்த விதம் நம்மை அறியும் 'நான் யார்?' என்பதை சிந்திக்க வைக்கிறது.

'தன்னை அறிய தனக்கொரு கேடில்லை' 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று ஐயா அவர்கள் நூலில் அடிக்கோடிட்டு காட்டிய விதம் மெய்சிலிர்க்க வைத்தது.

அனைவரும் இயற்கையுடன் இணைந்து ஒத்தும் உதவியுமாக மன மகிழ்வுடன், மனநிறைவுடன் வாழ்வோம் என்று கூறி அணிந்துரை எழுத வாய்ப்பளித்த ஐயா அவர்களுக்கும் இறையருளுக்கும் குருவருளுக்கும் நன்றி கூறி இந்த அணிந்துரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி ஐயா.

வாழ்க வளமுடன்
ஜெயலெட்சமி குமரேசன், B.Com, M.A
ஸ்கை பேராசிரியர், சென்னை

# போரில்லா நல்லுலகம்

## அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

உலகப் போர்களும் உலக அமைதியும் ..........என்று சிந்தித்துக் கொண்டிருந்த போது... போரின் கொடுமைகளையும் அதன் துன்பங்களையும் விளைவுகளையும் தெரிந்தால்தானே- உலக அமைதியின் முக்கியத்துவத்தை மானுடம் உணர முடியும் என்ற சிந்தனையின் விரிவே இப்புத்தகம்.

மாணவனாய் இருந்த போது இரண்டு உலகப் போர்களையும் அதில் மடிந்த எண்ணற்ற மரணங்களைப் படித்த போது கலங்கியதுண்டு.

இந்த மரணங்களுக்குக் காரணமான கொடுங்கோலர்களை நினைத்து வருந்தியதும் உண்டு.

சிறு வயதிலிருந்தே -வரலாறுகள் மீதும்- அதை வரைந்தவர்கள் மீதும் - எப்போதுமே ஒரு ஈர்ப்பு.

அதனாலேயே நெப்போலியன், புத்தர், இயேசு, ஹிட்லர், சீசர், அலெக்சாண்டர் என உலக சரித்திரத்தைப் புரட்டிப் போட்ட பலரைப் பற்றியும் தேடித் தேடிப் படிப்பேன்.

இரண்டாம் உலகப் போரைத் தன் பேராசையாலும் மண்ஆசையாலும் தொடங்கிய ஹிட்லர் எனும் ஒரு சரித்திரத்தின் மீது எனக்கு எப்போதுமே ஒரு தீரா பிரமிப்பு உண்டு.

ஹிட்லர் பற்றிய பல எதிர்மறையான கருத்துகளும் விமர்சனங்களும் வசைகளும் இருந்தாலும் - எங்கோ ஒரு சிறிய கிராமத்தில் பிறந்து- பிற்காலத்தில் மிகப் பலம் வாய்ந்த ஜெர்மனியையே- தனது உள்ளங்கைக்குள் உள்ளடக்கிக் கொண்ட, உலகையே புரட்டிப்போட்ட உலக மகா யுத்தத்தின் அடி நாதமாய் இருந்த -அந்த நாஜித் தலைவன்- வாழ்ந்த வீழ்ந்த சரித்திரம்- படிக்கப் படிக்க சுவை குறையாத ஒரு சுவாரஸ்யம்..!! (சோகமும் உண்டு)

அமெரிக்காவிற்கு பயணிக்கும் போதெல்லாம், விமானம் ஜெர்மனி மண்ணை தொடும்போது- உலகப் போர்களையும் ஹிட்லரையும் மனம் அசைபோடும்.

ஜெர்மனி விமானநிலையத்தில் காத்திருக்கும் நேரங்களில் இரண்டு உலகப் போர்களை உருவாக்கிய மண்மீது அமர்ந்திருக்கிறோம் என்று உள்ளுணர்வு சொல்லும்.

ஹிட்லர் ஆடி அடங்கிய மண். "ஆடி அடங்கும் வாழ்க்கையடா...ஆறடி மண்ணே சொந்தமடா" என்பார்கள். ஆனால் ஹிட்லருக்கு அந்த ஆறடி மண்கூட கிடைக்கவில்லையே!

தன்னைத்தானே சுட்டுக் கொண்டு உடல் சிதறிய அந்த ஏதேச்சதிகாரி- யூதர்களை கொத்துக் கொத்தாக கொன்றதை படிக்கும் போதெல்லாம் - மனம் ஏனோ வலித்துக் கொண்டே இருக்கும். வேதாத்திரியைப் பிரசவித்த இந்த பூமி தானே ஹிட்லரையும் பிரசவித்தது.

ஹிட்லருக்கு தனது கடைசி நாட்களைப் பதுங்கு குழியில் காலம் தள்ள வேண்டிய நிர்ப்பத்தம். பல கொலைகள் செய்ததற்கு செயல்விளைவாய் வந்த நிலை அல்லவா? இது!

ஹிட்லரின் நீண்ட கால காதலி, செல்வி ஈவாபிரான் ஹிட்லரைப் பிரிய மனமில்லாமல், சரமாரியாகப் பொழிகின்ற குண்டுகளுக்கிடையில் அந்தப் பதுங்கு குழியில் ஹிட்லரிடம் கெஞ்சுகிறாள்! "Please marry me. At any moment we may die. But I want to die as wife of a great man'.

மரணம் இப்போதோ, பிறகோ என்ற அந்த நிலையில் மோதிரங்கள் மாற்றப்படுகின்றன.

உலகையே ஆளப்போகிறேன் என்று சொன்ன அந்த மண்ணாசைப் பிடித்த சர்வாதிகாரிக்கு, திருமணத்தின்போது ஆசி வழங்கி அச்சதை போட யாருமே இல்லை. செயல்விளைவைப் பார்த்தீர்களா?

இரண்டாம் உலகப் போரை தனது தன்முனைப்பினால் ஆணவத்தினால் தொடங்கியபோது- சிங்கமாகக் கர்ஜித்த ஹிட்லர், போர் முடிவில் பூனையாகச் சுருங்கி புழுவாகத் துடித்தததான் மிச்சம்.

சிங்கம் அசிங்கமான கதைதான் இரண்டாம் உலகப்போர்? எத்தனையோ நாடுகளை அடக்கி அடாவடித்தனமாக சொந்தம் கொண்டாடினான் ஹிட்லர். அந்த நாடுகள் இருக்கின்றன.



சொந்தம் கொண்டாடிய மனிதன் எங்கே? மாறி மாறி மறைகிற இந்த மனிதனின் அவலங்களுக்கெல்லாம் காரணம் அவனது மண்ஆசையும், பேராசையும், ஆணவமும் தானே!

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே"

என்று ஏங்கிய தாயுமானவரின் உயர்ந்த எண்ணம் எங்கே!"



"வாழ்க வையகம்! வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்"

என்று உலகை வாழ்த்திய வேதாத்திரி மகரிசியின் விரிந்த மனம் எங்கே!

எல்லோரையும் துன்புறுத்தி தான் மட்டும் உயர நினைத்த ஹிட்லரின் கீழ் மனம் எங்கே?....கொடூர புத்தி எங்கே?



அடால்ஃப் **ஹிட்லரின் வாழ்க்கை வரலாறு-புகைப்படங்களாகவும்**

**ஆவணங்களாகவும் கல்வெட்டாகவும் வீடியோக்களாகவும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.**

மாணவப் பருவத்தில் --அப்பொழுதெல்லாம் இன்டர்நெட்டோ, விக்கிபீடியாவோ, யூடியூப்போ இல்லாத காலமாகையால்- முற்றுமுழுதாக சரித்திரங்களையும் சம்பவங்களையும் எழுத்தில் பொறிக்கப்பட்ட நாவல்கள் மூலம் கதையாகவும் நூல்கள் மூலம் தகவல்களாகவுமே அறிந்து தெரிந்து கொள்வேன்!

எனது தந்தை உலக வரலாற்றை அறிந்தவர் என்றபடியால் அவர் வாய் வழி மூலமாகவும் சொன்ன பல சுவாரஸ்யமான நிகழ்வுகளைக் கேட்டு வளர்ந்தேன்!!

ஏப்ரல் 20, 1889 அன்று மாலை 6:30 மணிக்கு ஜெர்மன் பவேரியாவிலிருந்து(Bavaria)எல்லையைத் தாண்டிய ஒரு சிறிய ஆஸ்திரிய கிராமமான பிரவுனாவ் (Braunau)இல் ஹிட்லர் பிறந்தார்! .இந்த மண்ணில் 56 ஆண்டுகள் வாழ்ந்து மறைந்தார்.

ஹிட்லரைப் போன்றுதானே இந்தியாவில் தமிழகத்தில் ஒரு சிறிய கிராமமான கூடுவாஞ்சேரியில், வேதாத்திரி மகரிசி அவதரித்தார். 96 ஆண்டுகள் வாழ்ந்த மகரிசி உலக அமைதிக்காக தன்னைத் தியாக செய்த அவதாரப் புருஷர்.

மகரிசி உலக அமைதியை நாடினார். ஹிட்லரோ உலக அழிவை நாடினார். ஏன் இந்த வேற்றுமை?

போர் வேண்டாம் என்றார் மகரிசி. போரைத் துவக்கினார் ஹிட்லர்.

உலக சமாதானத்தை வேண்டினார் மகரிசி. உலக அழிவை வேண்டினார் ஹிட்லர்.

ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பதை வலியுறுத்தினார் மகரிசி. ஜெர்மனி மட்டுமே வாழவேண்டும் - தான் மட்டுமே உலகை ஆள வேண்டும் என்று மண்ணாசை கொண்டார் ஹிட்லர்.

ஓர் உலக ஆட்சியே வேண்டும் என்று சொன்னவர் வேதாத்திரி மகரிசி. ஜெர்மனியே உலகை ஆளவேண்டும் என்று வாழ்ந்தார் ஹிட்லர்.

“கொலை செய்வான் ஒரு மூர்க்கன்” என்றார் வேதாத்திரி மகரிசி. கொலைக்காரனாகவே வாழ்ந்தார் ஹிட்லர்.

1895 ஆம் ஆண்டில், ஆறாவது வயதில், இளம் அடோல்ஃப் ஹிட்லரின் வாழ்க்கையில் இரண்டு முக்கியமான நிகழ்வுகள் நடந்தன.

முதலாவதாக, அவர் ஆரம்பப் பள்ளியில் நுழைந்தபோது, அதுவரை அவர் அனுபவித்த சுதந்திரமான, கட்டுப்பாடற்ற, கவலையற்ற நாள்கள் முடிவுக்கு வந்தன.

இரண்டாவதாக, அவரது தந்தை ஆஸ்திரிய சிவில் சேவையிலிருந்து ஓய்வூதியத்தில் ஓய்வு பெற்றார். ஆறு முதல் எட்டு வயதிற்கு இடையில், அடோல்ஃப் தனது குடும்பம் வசிக்கும் இடத்தை அடிப்படையாகக்கொண்டு இரண்டு வெவ்வேறு பள்ளிகளில் பயின்றார்.




மிகவும் திறமை மிக்க மாணவனாகத் திகழ்ந்த இவர், தொடர்ந்து அதிக மதிப்பெண் பெற்றதற்காகவும் வகுப்பில் சரியாகச் செயல்பட்டதற்காகவும் அவரது ஆசிரியர்களால் தொடர்ச்சியாகப் பாராட்டப்பட்டு வந்துள்ளார்!

ஆயினும் secondary பாடசாலைக்கு மாறியபின் அவரது கல்வியில் சறுக்கல் ஏற்படத் தொடங்கியுள்ளது.

1905 ஆம் ஆண்டில் அவர் முறையான கல்வியை முற்றிலுமாக விட்டுவிட்டு, ஒரு நோக்கமில்லாமல் வாசிப்பு, ஓவியம் என அலைந்து திரிந்தபடியே தனது நீண்டகாலக் கனவான ஓவியராகும் இலட்சியத்தை நோக்கிப் பயணித்தார்.

1907 ஆம் ஆண்டில், அவரது தாயார் இறந்தபின், புகழ்பெற்ற அகாடமி ஆஃப் ஃபைன் ஆர்ட்ஸில் சேர அவர் வியன்னாவுக்குச் சென்றார்.

அங்கிருந்து ஜெர்மனியப் படையில் இணைந்தது முதல் ஒரு மாபெரும் சர்வாதிகாரியாக உருவெடுத்ததுவரை அது ஒரு தனிச் சரித்திரம்..

இந்த பூமிப்பந்து எத்தனையோ போர்களைப் பார்த்து இருக்கிறது. அதில் 5 ஆண்டுகள் நடைபெற்ற முதலாம் உலகப்போரும், 7 ஆண்டுகள் நடைபெற்ற இரண்டாம் உலகப்போரும் மனிதகுலத்துக்கு பேரழிவை ஏற்படுத்தின.

உலக வரலாற்றில் இதுவரை கண்டிராத வகையில் மிகப்பெரிய அளவில் நடைபெற்ற இரண்டாம் உலகப் போரில் கிட்டத்தட்ட 10 கோடி வீரர்கள் பங்கேற்றனர்.

7 ஆண்டுகள் நீடித்த போரில் வீரர்கள், அப்பாவி பொதுமக்கள் என சுமார் 8½ எட்டரை  கோடி பேர் உயிர் இழந்தனர்.

இந்த போரில் உலகம் முழுவதும் சுமார் 25 லட்சம் இந்திய வீரர்கள் போரில் ஈடுபடுத்தப்பட்டனர். இவர்களில் 87 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மரணம் அடைந்தனர்.

முதலாம் உலகப்போரால் ஏற்பட்ட பொருளாதார சரிவில் இருந்து உலக நாடுகள் மீண்டு எழுந்து ஆசுவாசப்படுத்திக் கொண்டிருந்த நிலையில், ஜெர்மன் சர்வாதிகாரி ஹிட்லர் இரண்டாம் உலகப்போருக்கு பிள்ளையார் சுழி போட்டார்.

ஹிடலரின் கொடுங்கோலாட்சி பற்றி எண்ணும் போது வேதாத்திரியத்தின் பாடல் நம் நினைவுக்கு வருகிறது.

“அடிமரத்தை மேல்கிளையில் நின்று வெட்டும்

அறியாமை ஒக்கப்பலர் வாழ்வா தாரப்

படிகளெனும் உணவுஉடை. வீடு மூன்று

பாடுபட்டுத் தோற்றிடுவார். பயன் கவர்ந்து

மிடியால் அன் னார்வாட, நிர்வா கத்தோர்

மேலோர்கள் எனும் நிலையைத் தோற்று வித்துக்

கொடியசெயல் கள் வாழ்வில் அதி கரிக்க,

கொடுங்கோலாய் ஆட்சியினை மாற்றி விட்டார்." (ஞாக.131)

பிறப்பு, வளர்ப்பு, வாழ்வு, வளர்ச்சி, ஆட்சி, அதிகாரம் என பிரமிப்பின் உச்சத்திற்குச் சென்ற ஹிட்லரின் கொடுங்கோல் ஆட்சி வாழ்க்கையின் வீழ்ச்சியும் இயற்கையின் நியதிப்படி இறுதிக் கட்டத்தை வந்தடைந்தது...

உலக வல்லரசாக ஜெர்மனியை மாற்றியமைத்து, ரஷ்யா, இங்கிலாந்து, அமெரிக்கா என அனைத்து பலம் பொருந்திய வல்லரசுகளையே ஆட்டங்காண வைத்த அந்த ஆட்ட நாயகனின் அந்திம திக்திக் நிமிடங்கள் உறையவைக்கும் ஒரு தனி சரித்திரம்..

இந்த ஹிட்லர் போன்ற மனிதனின் மனநிலையைக் கெடுக்கும் போர் பற்றி வேதாத்திரியம் எச்சரிக்கிறது.

"ஒருலக ஆட்சியின்றி உலகில்போர் ஒழியா.

உலகில்போர் நிகழும்மட்டும் மனிதவளம் உயரா.

பாருலகில் போர்மூலம் பலவளமும் கெட்டால்

பயன்என்ன? யாருக்குப் போர்வேண்டும் உலகில்?

போருக்கு ஆயுதங்கள் செய்வோர்கள், விற்போர்,

பொன்விளைப்பார் கோடிகோடி. மக்கள்வாழ்வு நச்சாம்.

நேருக்கு நேர்நலனைக் காட்டவல்ல முறையில்

உலகில் அமைதிகாண நினைந்துநலம் செய்வீர்!" (ஞாக.256)

ரஷ்யர்கள் போலந்தின் குறுக்கே கிழக்கு ஜெர்மனியை நோக்கி முன்னேறியதும், நேச நாட்டு விமானப்படைகள் பெர்லினையும் குண்டுவெடிப்புத் தாக்குதல்களால் பேரழிவிற்கு உட்படுத்தியதால், ஜனவரி 1945 -ல் ஹிட்லர் பதுங்குக் குழிக்குப் பின்வாங்கினார்.

ஏப்ரல் 1945 தொடக்கத்தில், 2.5 மில்லியன் ரஷ்ய வீரர்கள் ஜெர்மன் தலைநகரை அடைந்தனர்.

இரண்டு வாரங்களுக்குப் பிறகு, அவர்கள் நகர மையத்தை அடைந்து, ஹிட்லரின் அடைக்கலத்தின் சில நூறு கெஜங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள்.

இரண்டாம் உலகப் போர் பெர்லினை நொறுக்கிய போது, இந்த பங்கர்கள் பொதுமக்களுக்கான வான்வழித் தாக்குதலிலிருந்து பாதுகாப்பாக ஒதுங்கவும், இராணுவ வீரர்களுக்கும், மிக முக்கியமான உறுப்பினர்களுக்குமான விரிவான நிலத்தடி தங்குமிடமாகவுமே செயல்பட்டது.

இவ்வாறான வான்வழித் தாக்குதல் முகாம்கள் தலைநகர் முழுவதும் பல இருந்தன.

இவை, பெர்லினின் கிட்டத்தட்ட 4 மில்லியன் மக்கள் தொகையை தாக்குதலின் போது பாதுகாப்பதற்கான இடமாகச் செயற்பட்டன.

பெர்லின் பங்கர் பதுங்குக் குழி ஆரம்பத்தில் ஹிட்லருக்கு ஒரு தற்காலிக வான்வழித் தாக்குதலிலிருந்து தப்பிக்க தங்குமிடமாகக் கட்டப்பட்டது.

ஆனால், பெர்லினில் அதிகரித்த குண்டுவெடிப்பு தாக்குதலால் அது ஹிட்லரின் நிரந்தரத் தங்குமிடமாக விரிவாக்க வழிவகுத்தது.

ஹிட்லரின் இந்தப் பதுங்குக் குழி 1936 மற்றும் 1944 என இரண்டு கட்டங்களாகக் கட்டப்பட்டு நிறைவடைந்தது.

இந்தப் பெர்லின் பதுங்குக் குழி ஜெர்மன் போர் தொழில் நுட்பத்தின் ஒரு மிகவும் அதிநவீனத் தயாரிப்பு ஆகும். இது 2,700 சதுர அடியில் 30 அறைகளையும், பல வெளியேறல்களையும் கொண்டிருந்தது. அதில் ஒன்று இப்போது வாகன நிறுத்தும் இடமாக மாறியிருக்கும் நியூ ரீச் சான்சலரியின் தோட்டத்திற்குச் செல்கிறது!



இந்த வசதி தரை மேற்பரப்பிலிருந்து 5 மீட்டர் கீழே

உள்ளது. அதாவது இது பெர்லினின் நிலத்தடி நீருக்கும் கீழே இருக்கிறது!

கவர் மற்றும் சுவர்கள் armored concreteடின் இரண்டு அடுக்குகளால் செய்யப்பட்டன. மேலும் இதற்குள்ளேயான காற்றோட்டம், மரண வாயுவுக்கு எதிரான வடிகட்டி (filter system against lethal gas) அமைப்பைக் கொண்டிருந்தது.

ஆங்கிலோ-அமெரிக்கன் வான்வழித் தாக்குதல்கள் கடுமையான சமயத்தில், அதாவது 1945 ஜனவரியில் ஹிட்லர் பதுங்குக் குழிக்கு வந்தபோது, அவர் தனது பிரத்யேக ஊழியர்களையும் அவரது நெருங்கிய உதவியாளரான மார்ட்டின் போர்மனையும் அழைத்துச் சென்றுள்ளார்.

ஹிட்லரின் காதலியான ஈவா ப்ரான் பிப்ரவரியில் அங்கு வந்து அவருடன் இணைந்து கொண்டார்.

ஏப்ரல் மாதம், பெர்லினில் உள்ள பொது அறிவொளி பிரசார அமைச்சரும், என்.எஸ்.ஏ.டி.பி., நாஜி கட்சியின் தலைவருமான ஜோசப் கோயபல்ஸ் (Josef Goebbels, minister of public enlightenment propaganda and head of the NSADP, the Nazi party) தனது மனைவி மற்றும் 6 குழந்தைகளுடன் வந்து சேர்ந்தார்.

ஏப்ரல் 29 அதிகாலை 6 மணிக்கு, ஹிட்லர் ஈவா பிரானை மணந்தார். பின்னர் தனது கடைசி விருப்பத்தையும் ஒரு அரசியல் சாட்சியத்தையும் தனது செயலாளர் ட்ராட்ல் ஜங்கேக்கு ஆணையிட்டார்.

அவரது விருப்பப்படி, அவர் தனது உடலையும் ஈவா பிரானையும் தகனம் செய்ய வேண்டும் என்ற தனது தனிப்பட்ட விருப்பத்தை ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் விதித்தார்.

‘எதிரிகளின் கைகளில் விழுவதை விட மரணத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான தனது விருப்பத்தை வெளிப்படுத்தினார்.




ஏப்ரல் 29 ஆம் தேதி காலையில், முசோலினியின் இத்தாலிய கட்சிக்காரர்கள் மற்றும் கிளாரெட்டா பெட்டாச்சி மூலமாக,

மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட செய்தி பதுங்குக் குழிக்குள் இருந்த மக்களுக்குக் கிடைத்தது.

இதையடுத்து ஹிட்லர் தனது ஊழியர்களை இறுதி முடிவுக்குத் தயார் செய்ய உத்தரவிட்டார்.


ஹிட்லரின் எஸ்.எஸ் மெய்க்காப்பாளர்கள் அவரது தனிப்பட்ட ஆவணங்களை அழித்து விட்டு வந்தனர்.

பங்கரின் இன்னோர் இடத்தில் மருத்துவர் ஒருவருக்கு, ஹிட்லரின் அல்சேஷன் நாய்க்கும் அவரது காதலி ஈவாக்கும் விஷம் தயார் பண்ண அறிவுறுத்தப்பட்டது.

இதில் மிகவும் சோகமான விஷயம் என்னவென்றால், ஏப்ரல் 29 அன்றுதான் அதுவரை காதலியாகவே இருந்து வந்த ஈவாவை, ஹிட்லர், தான் தற்கொலை செய்து கொள்ள சுமார் 40 மணிநேரத்திற்கு முன்னதாக திருமணம் முடித்து மனைவியாக்கிக் கொண்டார்!

ஏப்ரல் 29 மதியம் ஹிட்லர் தனது உடனடி ஊழியர்களைத் தவிர மற்ற அனைவருடனும் கைகுலுக்கி விட்டுப் பின் பங்கர் அறைக்குள் சென்றுள்ளார்!

கடுமையான விஷக் காப்ஸ்யூல்ஸ் முதலில் ஹிட்லரின் நாய்க்கும் அதைத் தொடர்ந்து அவரது மனைவிக்கும் கொடுக்கப்பட்டது!




"போர் என்ற நச்சு" என்பதை முன்னமே அறிந்திருந்தால் உணர்ந்திருந்தால்...மனைவிக்கும் மற்றவர்களுக்கும் இன்று விஷம் கொடுக்கும் நிலைமை வந்திருக்காதே..

"போர் என்ற நச்சு" வேதாத்திரியம் சொல்கிறது.

"உலகமக்கள் அனைவருமே உயர்வாழ்வை எய்த

உள்ளதடை போர் என்ற நச்சுஒன் றேயாகும்.

பலவகையாம் சீர்திருத்தம் மனிதவாழ்வில் வேண்டும்.

பண்பாடும் தீமைதரும் பழக்கவழக் கங்கள்

நலமளிக்கும் முறையினிலே நாம் மாற்ற வேண்டும.

நாடனைத்தும் வாழ்க்கைநலக் கல்விமுறை வேண்டும்.

உலகசமா தானம் என்ற ஒன்றையடைந்து விட்டால்,

ஒவ்வொன்றாய் மற்றதெல்லாம் எளிதில் பெறலாகும்." (ஞாக.258)

தன் முடிவை தானே நிர்ணயிக்க ஆசைப்பட்ட அந்த ஆட்ட நாயகன், அதன் பின் துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டுக்கொண்டு தற்கொலை செய்து கொண்டார்!

பெர்லின் பங்கரின் சுவர்களில் சிதறிய இரத்தத்துளிகளின் ஈரம் காயும் முன்பே தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களினதும் விதியை எதிரிகளின் கையில் விளையாடக் கொடுக்காது, தானே அதையும் வரைந்து, முடித்து, ஏப்ரல் 30, 1945 இல், அடோல்ஃப் ஹிட்லரும் ஈவா பிரானும் தங்கள் உயிரைப் பறித்துக்கொண்டு நியூ ரீச் சான்சலரியின் தோட்டத்தில் தகனம் செய்யப்பட்டனர்.



மே 1 ஆம் தேதி ஜோசப் கோயபல்ஸ்ஸும் அவரது மனைவி மக்தா கோயபல்ஸும் தங்கள் குழந்தைகளுக்கு பொட்டாசியம் சயனைடு விஷம் கொடுத்ததோடு தாமும் தற்கொலை செய்து கொண்டனர்.

அடுத்த நாள், பெர்லின் சரணடைந்தது! சோவியத் ராணுவம் அனைத்து அரசாங்கக் கட்டடங்களையும் பதுங்குக் குழியையும் ஆக்கிரமித்தது.



2004 ஆம் ஆண்டில், பதுங்குக் குழியில் கடைசி நாள்களைப் பற்றிய ஜெர்மன் திரைப்படம் (இத்தாலி,

ரஷ்யா மற்றும் ஆஸ்திரியாவுடன்) "டவுன்ஃபால்" (Der Untergang) வெளியிடப்பட்டது.

போர் தவிர்க்க அறிஞர்கள் துணை செய்ய வேண்டும் என்கிறார் வேதாத்திரி மகரிசி......

"மனிதஇனத் தோற்றத்தின் மாண்பறிந்து, பிறரை
　மதித்துலகம் வாழ்வதற்கு, மனமுவந்து நலம்செய்
புனிதமதத் தலைவர்களே! புகழ்மிக்க ஆட்சிப்
　பொறுப்பிலுள்ள அறிஞர்களே! பூவுலகில் எங்கும்
தனிமனிதன் வாழ்க்கைநிலை தரமுயர்ந்த உழைக்கும்
　தலைவர்களே! உங்களுக்குத் தலைவணங்கு கின்றேன்.
இனிசெய்ய வேண்டிது, என்றென்றும் உலகில் போர்
　ஏழாமல் காத்தமைதிதர, இறைஞ்சுகின்றேன் பணிந்து." (ஞாக.259)

இந்த பெர்லின் பங்கரை நினைக்கும் போதெல்லாம் அந்தச் சுவர்களில் சிந்திய குருதி வாடை என் நாசிக்குள் நுழைவது போன்ற ஒரு உணர்வு! இனம்புரியாத ஒரு அமைதி அங்கே குடிகொண்டு உள்ளது.

அது தற்போது சுற்றுலாப் பயணிகளுக்கான ஒரு மியூசியம் ஆக மாற்றப்பட்டிருந்தாலும் அங்கே ஒரு மயான அமைதி நிலவுவதை உணர முடிகின்றது.

அதன் ஒவ்வொரு தளத்திலும் ஹிட்லரின் வாழ்க்கை வரலாறு புகைப்படங்களாகவும் ஆவணங்களாகவும் கல்வெட்டாகவும் வீடியோக்களாகவும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

அவர் பயன்படுத்திய தளவாடங்கள், பொருள்கள், ஆடைகள் என அத்தனையும் மிகவும் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டுள்ளன.. உள்ளே புகைப்படம் எடுப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

ஒரு சாதாரண குடும்பத்தில் ஆறாவது பிள்ளையாகப் பிறந்த ஒரு குழந்தை,  எப்படி பிற்காலத்தில் பலம் வாய்ந்த ஜெர்மனியின் தலைவனாக உருவெடுத்து, உலகையே உலுக்கிப் போட்ட, உலகப்போரின் பிரதான சூத்திரதாரியாக மாறினான் என்பது வரையிலான அனைத்து வரலாறுகளும் அங்கே காட்சி வடிவில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன..

ஹிட்லரின் நாஜிப் படைகள் கொன்று குவித்த லட்சக்கணக்கான கோடிக்கணக்கான மக்களின் புகைப்படங்களைப் பார்க்கும் பொழுது ரத்தம் உறைந்து போகிறது.

கூட்டி அள்ளி கொள்ளி வைப்பதற்காகக் குவித்து வைக்கப்பட்டுள்ள குப்பைகளைப் போல அங்கங்கே மனித உடல் குவியல்களைப் பார்க்கும்பொழுது மனம் ஒருகணம் மரத்துப்போகிறது!!

வரலாற்றின் வழிகளில் சிந்தப்பட்ட ரத்தத் துளிகளின் வாடை இன்னும் வலியோடு வீசுகிறது!

அவரால் கொன்று குவிக்கப்பட்ட அப்பாவி உயிர்களின் ஓலம் இன்னும் அந்த இடத்தைச் சுற்றி உரக்க ஒலித்தபடி உள்ளதாய் உணர்ந்தேன்.



நிர்வாணம் ஆக்கப்பட்ட பெண்களையும் நிர்கதியாக விடப்பட்ட குழந்தைகளையும் பார்க்கும்பொழுது உடைந்து சிதறும் உள்ளம், கருகிக் குவித்த உடல்களைப் பார்க்கும் பொழுது கரித் துண்டாகி கீழே விழுகிறது...

போரின் கொடுமைகளை அறிந்த உணர்ந்த வேதாத்திரியம் சொல்கிறது.....

"உடலில் சிறு காயமோ உறுப்புகளில் அடியோ

ஒருவருக்கு ஏற்பட்டால் உடன் வாழ்வோர் எல்லாம்

கடலுலகில் படும்துன்பம் காண்கின்றோம் போரில்

கணக்கின்றிக் கணப்பொழுதில் மடிகின்றார் மேலும்

படமுடியா துயரோடு பரு உடலின் உறுப்பு

பல இழந்தும் பதைபதைத்துத் துன்பமுறக் காண்போம்

நடந்த செல்லும் பிணங்கள் அல்ல நாம் இவற்றைப் பார்த்து

நமது கடமை தேர்ந்து நலம் செய்யாதிருக்க” (ஞாக.254)

எல்லாவற்றிற்கும் இரு பக்கங்கள் இருப்பது போலவே ஹிட்லருக்கும்! அவர் அன்று கண்ட கனவின் விளைவே இன்றைய ஒன்றிணைந்த ஐரோப்பாவும் யூரோ நாணயமும்.

ஹிட்லரின் மறு பக்கத்தையும் புரட்டிப்போட்டு நான் படித்திருந்ததால் அங்கே காணும் காட்சிகளை வைத்து அந்த சர்வ வல்லமை பெற்று வாழ்ந்து வீழ்ந்தவன் அதே மேல் ஒட்டு மொத்த வெறுப்பை என்னால் உமிழ முடியவில்லை.

தனது திறமையை உலக முன்னேற்றத்திற்காக மானுட மேம்பாட்டிற்காகப் பயன்படுத்தியிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும் என்று மனசு சொல்லியது.

ஹிட்லர் இறுதியாகத் தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்படும் அறை, அவர் கடைசியாகப் பயன்படுத்திய அனைத்துப் பொருள்களும் தளவாடங்களுடனும் சுற்றிலும் கண்ணாடியால் மூடப்பட்டு பத்திரமாக பாதுகாக்கப்பட்டுள்ளன.

ஹிட்லர் போன்றவரின் கொடுங்கோலாட்சியை மாற்ற வேண்டும் அகற்ற வேண்டும் என்று வலியுறுத்துகிறது வேதாத்திரியம்.

“பணமுடையோர், ஆட்சியதி காரம் என்ற

பதவியுளார், குழுவின ராயும், தனித்தும்,

உணவுஉடை வீடெனும் முப்பொருளைத் தோற்றம்

உழைப்பாளர் தமைஅடிமை கொண்டு தங்கள்

குணத்திற்கும் விருப்புக்கும் ஏற்ற வாறு,

கொடுங்கோலாய், அரசியலை மாற்றும் போக்கை

உணர்த்திச்சமு தாயநலம் அன்பின் போக்கில்

உயர்வதற்கு உழைப்பதுவே அறிந்தோர் செய்கை." (ஞாக.158)




ஒட்டுமொத்த உலகின் தலையெழுத்தையே மாற்றி எழுதிய ஒரு சர்வாதிகாரி தன் இறுதி நிமிடங்களில் தனது தலைவிதியைத் தானே நிர்ணயிக்க வேண்டும் என்ற வைராக்கியத்தோடு தனது உயிரை மாய்த்துக்கொண்ட அந்தக் கடைசி திக் திக் நிமிடங்கள் நிறைந்த அந்த அறையைப் திரைப்படத்தில் பார்க்கும் பொழுது ஏதோ இனம் புரியாத ஓர் உணர்வு உச்சி முதல் உள்ளங்கால் வரை பரவிச் சிலிர்த்துப் போகிறது!!

சொல்லில் அடங்காத ஒரு சோகம், ஒரு பாரம் மனதை அழுத்த, கனத்த இதயத்துடன் திரைப்படத்தில் பார்த்த அந்தக் கல்லறை காட்சியை விட்டு வெளியேறினேன்...

"உலக சமாதான ஆராய்ச்சி" செய்கிறார் வேதாத்திரி மகரிசி.

உலக சமாதானத்தை நாடி எங்கும்
உண்மை ஆர்வத்துடனே பெரும்பாலோர்கள்,
பல விதமாய்ச் சிந்தித்து வருகின்றார்கள்.
பயனுள்ள முடிவு இதுவரையில் காணோம்.

கலகத்தின் காரணமோ கண்ட மட்டும்,
கணக்கெடுக்க முடியவில்லை. அவை களைந்து
நலம் விளக்கும் வழிமுறைகளை நன்னோக்கத்தால்
நாம் வகுத்தது இது வரைக்கும் எண்ணிறந்த." (உசபா..1)

மனித இனம் பல வகைகளிலும் படுகின்ற துன்பங்களைக் கண்டு, அவைகளைப் போக்க வழி காண வேண்டும் என்ற எண்ணம் நாளுக்கு நாள், எல்லோருடைய நினைவிலும் வலுப்பெற்றே வருகிறது.



அத்துடன், உலக மக்கள் யாவரும் ஒன்று பட்டுச் சமாதான வாழ்வையடைய வேண்டியதே இறுதி லட்சியம் என்ற எண்ணமும் அதற்கேற்ற திட்டமும் தேவையே என்ற எண்ணமும் ஏற்பட ஏற்பட, அத்தகைய இறுதி இலட்சியமும், திட்டமும் அவசியம் என்ற பெருவிருப்பம் பெரும்பாலோர் நெஞ்சில் பூரணமாய் எழுவதாயிற்று.

உயர் நோக்கமும் பொறுப்புணர்ச்சியும் உள்ள பெருந் தலைவர்களும் அறிஞர்களும் உலக சமாதானம் அடைய வேண்டும் – உலகத்தில் சமாதானம் ஏற்பட வேண்டும் – என்று தம் உள்ளத்தில் உண்மை ஆர்வத்துடனே பலகாலமாகவே சிந்தனை செய்தே வருகிறார்கள்.

எனினும் இதுவரையில் பலன் தரத்தக்க முடிவு அல்லது திட்டங்கள் ஏற்படவில்லை.

நாம் உணர்ந்த மட்டும், உலகில் மனிதரிடையே உள்ள பலவிதமான சச்சரவுகளுக்கும் அடிப்படையான காரணங்களை எண்ணியோ, அளவிட்டோ கூறவும் முடியவில்லை.

இத்தகைய சங்கடங்கள் அனைத்தையும் போக்கி, உலக சமாதானம் என்ற பெரும் நன்மையை விளைவிக்க, எண்ணற்ற அறிஞர்கள் அவர்களின் நன்னோக்க சிந்தனையால் நுணுகி ஆராய்ந்து, இதுவரையில் கண்ட வழி முறைகளும் பலப்பல.

உலக அமைதிக்காக அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி வழங்கிய 14 வாழ்க்கை நலத்திட்டங்கள் உலக அமைதிக்கு உறுதுணையாக அமையும் என்பதில் ஐயமில்லை.

"போரில்லா நல்லுலகம், பொருள்துறையில் சமநீதி,
நேர்மையான நீதிமுறை, நிலவுலகுக்கோர் ஆட்சி,
சீர்செய்த பண்பாடு, சிந்தனையோர் வழிவாழ்வு,
சிறப்புணர்ந்த பெண்மதிப்பு, தெய்வநீதி வழிவாழ்தல்,
தேர்திருவிழா தவிர்த்தல், சிறுவர்கட்கே விளையாட்டு,
செயல்விளைவு உணர்கல்வி, சீர்காந்த நிலைவிளக்கம்,
பார்முழுதும் உணவு நீர் பொதுவாக்கல், பல மதங்கள்
பலகடவுள் பழக்கம் ஒழித்துண்மை ஒன்றை தேர்ந்திடுதல்."(ஞாக.240)

## திட்டம் 1 போரில்லா நல்லுலகம்:

போர் என்பது மனிதனை மனிதனே தனித் தனியாகவோ, கூட்டாகவோ கொன்று குவிக்கும் கொடிய செயல்.
நாம் வாழப் பிறந்து விட்டோம். வாழ்விற்கு விரிந்த உலகம் இருக்கிறது. இயற்கை வளங்கள் பலவும் உள்ளன. ஒருவரோடு ஒருவர் ஒத்தும் உதவியும் இயற்கை வளங்களை அனுபவித்து இன்புற்று வாழ வேண்டும்.

உலகில் இதுவரையில் எத்தனையோ போர்கள் நடந்து விட்டன. அவற்றுக்கு காரணம் என்ன? என்ன நன்மை யாருக்கு விளைந்தது? இன்னும் போர் உலகுக்குத் தேவைதானா? இதுபோன்ற வினாக்களை எழுப்பிக் கொண்டு ஆராய்வோம்.
போர் என்பதை அடியோடு மனித குலத்திலிருந்து ஒழித்து விட வேண்டும்.

## திட்டம் 2 பொருள்துறையில் சமநீதி:

பொருளாதார துறையில் எல்லோருக்கும் சமநீதி வேண்டும். பொருள் துறையில் பணம் என்பது உழைப்பின் அடையாளம் (Token of Labour is Money). இயற்கை வளம் எளிதாக அனைவருக்கும் சுலபமாகக் கிடைக்கிறது. உழைப்பின் பலனாகக் கிடைக்கின்ற பொருட்களையும், செல்வத்தையும் மனிதன் பகிர்ந்து அனுபவித்து வாழ வேண்டும்.

## திட்டம் 3 நேர்மையான நீதிமுறை:

மனித வாழ்வுக்கு ஒத்தான உயர்ந்த பண்பாடு நேர்மையான நீதிமுறை. இது அவ்வப்போது ஒவ்வொரு நாட்டின் அரசியல் தலைவர்களால் வகுக்கப்பட்டுப் பின்பற்றப்படுகிறது. அரசியல் தலைவர்களோ, மனித வாழ்வைப் பற்றிய தத்துவம், விஞ்ஞானம் என்கின்ற இரு துறைகளிலும் சிந்தனையின் மூலம் முழுமையாக அறிந்து கொள்ளாதவர்கள்.
இதனால், இன்று வரையில் அப்பழுக்கு அற்ற நீதிமுறையும் அதை செயல்படுத்துகின்ற முறையும் உலகிலுள்ள எந்த நாட்டிலும் உருவாகவில்லை. எனவே, நீதித் துறையில் இயற்கைக்கு முரண்படாத நேர்மை வேண்டும்.

## திட்டம் 4 நிலவுலக்கோர் ஆட்சி

உலகில் பிறந்து வாழும் எல்லா மக்களுக்கும் சம உரிமையும், சம பிரதிநிதித்துவமும் அளிக்கத்தக்க முறையில் எல்லா நாடுகளையும் இணைத்த, எல்லா நாட்டு ஆட்சிக்கும் மேலாதிக்கம் உடைய, ஓர் உலகப் பேரரசு ஜனநாயக முறையில் அமைக்கப்பட வேண்டும். செயல்புரியவும் வேண்டும். மக்கள் அனைவருக்கும் பொறுப்புடையதாக, உலக மக்கள் அனைவரும் ஆட்சியில் பங்கு கொள்ளத்தக்க வகையில் உலகப் பொது ஆட்சி வேண்டும்.

## திட்டம் 5 சீர் செய்த பண்பாடு:

தனிமனிதனுக்கு ஐந்தொழுக்கப் பண்பாடு வேண்டும். தனிமனித அமைதி மூலம் தான் உலக அமைதி கிடைக்கும். எனவே, ஒவ்வொரு மனிதனும் இந்த ஐந்தொழுக்கப் பண்பாட்டைப் பின்பற்ற வேண்டியது அவசியம் ஆகிறது.

1) நான் என் உடலாலும், அறிவின் உழைப்பாலும் உழைத்து வாழ்வேன்.
2) நான் என் வாழ்நாளில் யாருடைய உடலுக்கும் மனதிற்கும் துன்பம் தரமாட்டேன்.
3) பிற உயிரை உணவுக்காக கொலை செய்ய மாட்டேன்.

4) பிறர் பொருளையும், வாழ்க்கைச் சுதந்திரத்தையும் மதித்துப் போற்றுவேன்.
5) துன்பப்படும் பிற உயிர்களுக்கு என்னால் முடிந்த உதவிகளைச் செய்வேன்.

## திட்டம் 6 சிந்தனையோர் வழிவாழ்வு:

முற்றும் உணர்ந்த சிந்தனையாளர்களது வழியில் வாழவேண்டும். ஏனெனில், காலங்காலமாக மனிதனுடைய வாழ்க்கை சிலருடைய தவறான செயல்களினால் நலம் குலைந்து போகின்றது. அதனை இக்காலத்திற்கு ஏற்றவாறு சிந்தனையாளர்களைக் கொண்டு திருத்தம் செய்து கொள்ள வேண்டும்.

உலகில் உள்ள மக்கள் அனைவரும் அறிவிலும் செயல்முறையிலும் வேறுபட்டு இருப்பதால், அனைவருமே சிந்தனையோர் காட்டிய வாழ்க்கை நெறியில் வாழ்வதுதான் பாதுகாப்பானது. வெற்றியும் அமைதியும் அளிக்கவல்லது.

## திட்டம் 7 சிறப்புணர்ந்த பெண் மதிப்பு:

சமுதாயத்தில் பெண்களுடைய தொண்டும் அறிவும் மிகவும் அவசிமானவை.

மதிப்புடையவை. பயன்தரத் தக்கவை.
இந்த மதிப்பைப் பல இடங்களில் உணராத காரணத்தினால், ஆணாதிக்கச் செயல்கள் மூலம் பெண்களும் அவமதிப்புக்கும், ஏழ்மைக்கும், அடிமைத்தனத்திற்கும் ஆளாகி வருகிறது.

இதனைச் சீர்திருத்தி, பெண்மையின் பெருமையை அனைவரும் உணர்ந்து மதித்து வாழத்தக்க வாழ்க்கை நெறி அவசியம்.

## திட்டம் 8 தெய்வநீதி வழி வாழ்தல்:

இறைநிலை என்பது ஆற்றலும் (Self compressive pressure force) அறிவும் (Consciousness) கொண்டு, பிரபஞ்சத்தைத் தோற்றுவித்து முறையாக காத்தும் வருகின்றது.

மனிதன் தன்முனைப்பில் இறையாற்றலின் மதிப்பை உணராது செயல்புரிந்து, சமுதாயத்தைச் சிக்கலில் ஆழ்த்தி வருகின்றான். இந்தத் தவறு எழாமல் காத்துச் சமுதாயத்தை மேன்மைப்படுத்த வேண்டியது அறிஞர்கள் கடமையாகும்.

## திட்டம் 9 தேர்த்திருவிழா தவிர்த்தல்:

வியாபார நோக்கத்தோடு தெய்வத்தின் பெயரால் மக்களை கூட்டத்தை சேர்த்து சுகாதாரக்குறைவு, பண்பாட்டை சீர்குலைக்கும் கலை நிகழ்ச்சிகள், சட்டம் ஒழுங்கு பாதிப்புகள் இவற்றை ஏற்படுத்தும் தேர்த்திருவிழாவை தவிர்ப்பது இக்காலத்திற்கு நன்மையாக அமையும்.

## திட்டம் 10 சிறுவர்கட்கே விளையாட்டு:

தனிமனிதர்களுக்கு இடையேயும், நாடுகளுக்கிடையேயும் போட்டி, பொறாமை, பகை முதலியவற்றை இக்காலத்தில் விளையாட்டு உண்டாக்குகிறது.

வயதானவர்கள் உடலை வருத்தி விளையாடும்போது எலும்பு, தசைகள் நரம்புகள் பாதிக்கப்படுகின்றன. எளிமையான உடற்பயிற்சியே வயதானவர்களுக்குப் போதுமானது.

எனவே, விளையாட்டு என்ற திட்டத்தைப் பள்ளியில் படிக்கின்ற சிறுவர்களின் உடல் வளத்தையும், மன நலத்தையும் காக்க மாத்திரம் உரியதாகக் கட்டுப்படுத்தி கொள்ள வேண்டும்.

## திட்டம் 11 செயல் விளைவு உணர் கல்வி”

ஒவ்வொரு செயலுக்கும் தக்க விளைவு உண்டு என்பது இறைநீதியாகும். எண்ணம், சொல், செயல் என்ற மூன்றாலும் மனிதன் செயல்புரிகிறான்.
அதற்கான விளைவு இன்பம், துன்பம், அமைதி, பேரின்பம் என்ற ஏதாவது ஒரு நிலையைப் பெறலாம்.

எதைக் கொடுக்கிறோமோ அதையே பெறுகிறோம். எல்லா செயலுக்கும் அதற்கேற்ற தக்க விளைவு உண்டு என்பதை அறிந்து அறநெறி

வாழ்க்கை வாழ்ந்து பயன் பெற வேண்டும். இதுவே செயல்விளைவுத் தத்துவம்.

## திட்டம் 12 சீர்காந்த நிலை விளக்கம்:

இந்தப் பிரபஞ்சு இயக்கத்தில் காந்தம் என்ற பேராற்றல் இயற்கையிலும், செயற்கையிலும் முக்கியமானதாக விளங்குகிறது. விஞ்ஞான வளர்ச்சியில் முன்னேற்றமடைந்துள்ள இக்காலத்திலும் அதைப் பற்றிய மதிப்பை மனிதகுலம் உணர்ந்து கொள்ளவில்லை. அதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

## திட்டம் 13 உணவு நீர் பொதுவாக்கல்:

மனித இனவாழ்க்கைக்கு உணவும், நீரும் அவசியமானவை. இந்த இயற்கைச் செல்வங்களை தனிமனிதனோ, மனிதக் குழுக்களோ தங்களுக்கிடையே போட்டியின்றி அனுபவிக்க வேண்டும். வெயிலைப் போன்று, காற்றுப் போன்று, உணவும் நீரும் உலகப் பொதுவாக அமைய வேண்டும்.

## திட்டம் 14 உண்மை ஒன்றை வழிபடுதல்:

மனித இன வாழ்க்கையில் இறையாற்றல் முதன்மையானது. அந்த ஆற்றலைப் பகுதி பகுதியாகப் பயன்படுத்தி மனித வாழ்வு நடைபெற்று வருகிறது.

இறைநிலை என்பது ஒன்றுக்கு மேல் இருக்க முடியாது. இதனைத் திரித்துக் கூறி மக்களிடம் மதப் போராட்டமும் பிரச்சனைகளும் அதிகரித்து எத்தனையோ குழப்பங்களும் போர்களும் நடந்து விட்டன. இனி அவ்வாறு குழப்பம் எழாது பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

அருட்தந்தையின் சிந்தனைகள் உலகமெல்லாம் பரவ நாள்தோறும் வாழ்த்துவோம்.

“உலகிலுள்ள பொறுப்புடைய தலைவரெல்லாம்
உயிரறிவை உள்ளுணர்வாய்ப் பெறுதல் வேண்டும்.
உலகனைத்து நாடுகளின் எல்லைகாக்க

ஓருலகக் கூட்டாட்சி வலுவாய் வேண்டும்.
உலகில் போர் பகை அச்சமின்றி மக்கள்
உழைத்துண்டு வளம்காத்து வாழவேண்டும்.
உலகெங்கும் மனிதகுலம் அமைதியென்னும்
ஒரு வற்றாத நன்னிதி பெற்றுய்யவேண்டும்." (ஞாக.1852)

ஹிட்லரைப் போன்ற ஏதேச்சதிகாரிகள் உலகில் இனி தோன்ற மாட்டார்கள். மூன்றாம் உலகப் போரும் வராது. உலக அமைதி விரைவில் வந்துவிடும்.

வாழ வேண்டிய- வாழ்ந்து கொண்டிருக்கும் அனைவரும் ஒன்று கூடி ஒருவருக்கொருவர் சாதகமான முறையில் வளமான வாழ்வை எய்த, வாழ ஒரு பொதுவான திட்டத்தை வகுத்திடுவோம்.

மனிதனின் வாழ்க்கை தத்துவத்தை அறிந்து, பிறப்பு - இறப்பிடையே, அறிவு இயக்க காலத்தில் மட்டும் ஏற்படும் இன்ப துன்ப தோற்றம், மாற்றம் என்ற மாறுபாடுகளையும், மனதில் கொண்டு அமைதியாக வாழ திட்டங்கள் அமைத்து கொள்வோம்.

மனித இனம் தொன்று தொட்டு வாழ்ந்து கண்ட அறிவன் ஆராய்ச்சி, அனுபவங்கள், செயல்திறமையின் விளைவுகள் என்பனவற்றையும் ஒப்பிட்டுப் பார்த்த பிறகே, இந்த உலகில் எந்த பாகத்திலும் மனித இன வாழ்வின் இன்பத்திற்கு தடை, இடையூறு இல்லாத வழியில் வாழ உலகில் பிறந்துவிட்ட ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமை உண்டு என்பதை உணர்ந்து கொள்வோம்.

மனித ஆற்றல், புத்திநுட்பம், கூட்டுறவால் ஒன்றுசேர்த்து, அறிவோடு சுகாதாரம், பொருளாதாரம், ஆட்சி முறையால் உயர்த்தி, உலகோர் எல்லாம்,அன்புநெறியாக, இன்பம் அமைதியோடு நிலவுலகில் வாழ ஒத்துழைப்போம்.

ஒருவருக்கொருவர் சாதகமான முறையில் எண்ணம், சொல், செயல்களை பிரயோகித்து ஒற்றுமையாய் வாழத் தகுந்த ஓர் உலக

ஆட்சி ஏற்படுத்தி எதிர்நோக்கி நிற்கும் அபாயங்களைத் தவிர்த்து உலக அமைதி பெற்று வாழ்ந்திடுவோம்.

தெய்வநிலையை புரிந்து கொண்டதால் "நான் யார்" என்பதையும் புரிந்து கொண்டோம். அந்தப் பெருவெளியின் எழுச்சி பெற்ற நிலைதான் நான். நான் மட்டுமல்ல.

இங்குள்ள அனைத்தும் சுத்தவெளியின் எழுச்சி பெற்ற நிலைகளே என்பதையும் புரிந்து கொண்டேன். இந்தப் புரிதலில் மனிதகுல ஞானம் புதிய எல்லைகளைத் தொடுகிறது.

தெய்வம் ஒன்றுதான் என்றாலும், அதைப்பற்றிப் பலப்பல கற்பனைகள் நம்மைப் பிரித்து வைத்தன.

கற்பனைகள் காணாமல் போகும்போது அவை உருவாக்கிய பிரிவினைகளும் தானாகவே அகன்று விட, நாம் ஒன்றாகி விடுகிறோம்.

தத்துவத்தில் நம்மை ஒன்றாக்கி, தரணியை ஒன்றாக்குகிற பெருமை வேதாத்திரி மகரிசியைச் சாரும்.

"ஒன்றே குலம். ஒருவனே தேவன்" என்னும் சத்தியவாக்கு மகரிசியில் உயிர்த்தெழுகிறது.

உயிரோட்டமான இந்த ஒற்றுமை உணர்வுதான் உலக அமைதிக்கான விதை.

இந்த அமைதி விதையை விதைக்காமல், அமைதி விருட்சத்தையும், அதுதரும் நிழலையும் எதிர்பார்க்க முடியாது.

வேதாத்திரியம் தரும் ஒற்றுமைப் பார்வை உலக பொதுவான அருள்நெறிப் பார்வையாகும். இதுவே வேதாத்திரிய சாரம்.

துணைநின்ற நூல்கள்.


1. ஞானக்களஞ்சியம்- வேதாத்திரி மகரிசி
2. உலக சமாதானம்- வேதாத்திரி மகரிசி
3. முதல் உலகப் போர்- மருதன்
4. வேதாந்தமும் வேதாத்திரியமும் -அழகர் ராமானுஜம்
5. **The World Crisis, 1911-1918**, by Winston Churchill
6. **The Great War and Modern Memory**, by Paul Fussell Hitler
7. **The First World War**, by Hew Strachan Mein Kampf . Adolf Hitler
8. *Poilu: The World War I Notebooks of Corporal Louis Barthas, Barrelmaker 1914–1918*, **by Louis Barthas**
9. *A World Undone: The Story of the Great War, 1914 to 1918*, **by G. J. Meyer**
10. "Vethathiriam banukumar" - youtube speeches by mannargudi Banukumar.